கடலூர் சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம்,கடலூர் சுப்புராயலு ரெட்டியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். பகுதி செயலாளர் எஸ்.பி.நடராஜன் வரவேற்புரையாற்றினார். தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி, கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., கடலூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் சுவை.சுரேஷ், மேயர் சுந்தரி ராஜா, மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, ஒன்றிய கழக செயலாளர்கள் தங்க.ஆனந்தன், பி.சுப்பிரமணியன், ஆர்.விஜயசுந்தரம், கே.ஆர்.தனஞ்செயன், மாநகர அவைத் தலைவர் பி.பழனிவேல் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு அரசின் சார்பில், சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் அவர்களின் 166–வது பிறந்தநாளையொட்டி நேற்று (18.2.2025), சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அன்னாரின் திருவுருவப்படத்திற்கு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நலவாரியத் தலைவர் எர்ணாவூர் ஏ.நாராயணன், துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர்கள் மு.பா.அன்புச்சோழன் (மக்கள் தொடர்பு), ச.செல்வராஜ் (செய்தி) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

சண்டிகர் தமிழ்மன்ற கட்டிட விரிவாக்கப் பணிக்கு ரூ.50 லட்சம்!

தில்லித் தமிழ்ச்சங்க திருவள்ளுவர் கலையரங்க பணிக்கு ரூ.50 லட்சம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் காசோலைகள் வழங்கினார்!

சென்னை. பிப். 19 -

தில்லித் தமிழ்ச் சங்கத்தின் திருவள்ளுவர் கலையரங்கப் புத்தாக்கப் பணிகளை மேற்கொள்ள 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலை மற்றும் சண்டிகர் தமிழ் மன்றத்தின் கட்டட விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.2.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் தில்லித் தமிழ்ச் சங்கத்தின் திருவள்ளுவர் கலையரங்கப் புத்தாக்கப் பணிகளை மேற்கொள்ள 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை தில்லித் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சக்திபெருமாள், துணைத் தலைவர் பி. இராகவன் மற்றும் பொதுச் செயலாளர் இரா. முகுந்தன் ஆகியோரிடம் வழங்கினார். மேலும், சண்டிகர் தமிழ் மன்றத்தின் கட்டட விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை சண்டிகர் தமிழ் மன்றத்தின் பொதுச் செயலாளர் ராஜசேகர், பொருளாளர் சிவசுப்ரமணியம், இணைப் பொருளாளர் குணசேகரன் ஆகியோரிடம் வழங்கினார்.

'நமது தாய்மொழியான தமிழ் ஓர் உயர்தனிச் செம்மொழி, இது உலகில் வேறு எந்த இனத்துக்காவது, தாய்மொழியாக இருந்திருக்குமானால், உலகப் பொது மொழியாகவே ஆகியிருக்கும்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ் மொழியின் சிறப்பினை போற்றினார். இத்தகைய வளமிக்க மொழிக்குச் செம்மொழித் தகுதியைப் பெற்றுத் தந்து, தமிழர்களின் நூற்றாண்டுக் கனவை மெய்யாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். பல்வேறு சூழல் காரணமாக புலம் பெயர்ந்து பிற மாநிலங்களில் வாழும் தமிழர்களின் வருங்காலத் தலைமுறையினர் செம்மொழியாம் தமிழ்மொழியின் சிறப்பையும் செம்மையையும் உணர்ந்து கொள்ளும் வகையிலும், பிற மாநிலத்தவர் தமிழ் மொழியை அறிந்து கொள்ளும் வகையிலும், பண்பாட்டு வேர்களைக் காப்பதற்காகவும் இந்தியாவின் பிற மாநிலங்களில் தமிழ்ச் சங்கங்களை தோற்றுவித்து மொழி, இலக்கியம், கலை, நலத்திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்றன. அத்தகையப் பணிகளை மேற்கொண்டு வரும் தமிழ்ச் சங்கங்களை ஊக்குவிக்கும் வண்ணம் தமிழ்நாடு அரசால் தேவையான நிதியுதவிகள் அவ்வப்போது வழங்கப்பட்டு வருகின்றன.

அவ்வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அடியொற்றி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க, 2024 - 2025ஆம் நிதியாண்டிற்கான தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கையில், "முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் தில்லித் தமிழ்ச் சங்கத்தில் 1997ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட திருவள்ளுவர் கலையரங்கத்தில் தில்லி வாழ் தமிழர்களில் வழித்தோன்றல்கள் பயனுறும் வண்ணம் தமிழ் மொழிப் பயிற்சி, நடனம் மற்றும் இசை வகுப்புகள் நடத்துதல். தமிழ் சார்ந்த கலை, இலக்கிய நிகழ்ச்சிகள், தமிழிணையக் கருத்தரங்குகள் உள்ளிட்ட தமிழ் சார்ந்த நிகழ்வுகள் நடத்திட ஏதுவாக கலையரங்கத்தினைப் புனரமைத்திட தில்லித் தமிழ்ச் சங்கத்திற்கு ரூபாய் 50 இலட்சம் வழங்கப்படும்" என்றும்,

"சண்டிகர் வாழ் தமிழர்களின் இளந்தலைமுறையினர் தமிழ் மொழியின் சிறப்பினையும் கலைப் பண்பாட்டு விழுமியங்களையும் அறிந்துகொள்ளும் வண்ணம் தமிழ் மொழிப் பயிற்சி, ஆடற்கலை, இசைக்கலை உள்ளிட்ட நுண்கலைகளைப் பயிற்றுவிக்க ஏதுவாக சண்டிகர் தமிழ் மன்றக் கட்டட விரிவாக்கப் பணிகளுக்கு ரூபாய் 50 இலட்சம் வழங்கப்படும்" என்றும், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

இந்த அறிவிப்புகளை செயல்படுத்தீடும் வகையில், தில்லித் தமிழ்ச் சங்கத்திற்கு 50 இலட்சம் ரூபாயும், சண்டிகர் தமிழ் மன்றத்திற்கு 50 இலட்சம் ரூபாயும், என மொத்தம் 1 கோடி ரூபாய் நிதி விடுவித்தும், தமிழ் இணையக் கல்விக் கழகத்துடன் இணைந்து 'அகரம் முதல் சிகரம் வரை' திட்டத்தினை செயல்படுத்தும் வகையிலும் ஆணைகள் வெளியிடப்பட்டு, அதன்படி, தில்லித் தமிழ்ச் சங்கத்தின் திருவள்ளுவர் கலையரங்கப் புத்தாக்கப் பணிகளை மேற்கொள்ள 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை

தில்லித் தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகிகளுக்கும், சண்டிகர் தமிழ் மன்றத்தின் கட்டட விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை சண்டிகர் தமிழ் மன்றத்தின் நிர்வாகிகளுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் ஆகியோர் உடனிருந்தனர்.

21. 22 தேதிகளில் கடலூர் மாவட்டத்திற்கு வருகை தரும்

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பிரமாண்ட வரவேற்பு!

கடலூர் சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர் பிப்.19 -

கடலூர் சட்டமன்ற தொகுதி செயல்வீரர்கள் கூட்டம், 17.02.2025 - திங்கள் கிழமை, மாலை 4 மணியளவில், கடலூர் சுப்புராயலு ரெட்டியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார்.

பகுதி செயலாளர் எஸ்.பி.நடராஜன் வரவேற்புரையாற்றினார்.

தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி, கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., கடலூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் சுவை.சுரேஷ், மேயர் சுந்தரி ராஜா, மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பேசியதாவது;

உழைக்கின்ற உழைப்பை பொறுத்து பொறுப்புகள் தேடி வரும். எல்லோரும் அவரவர் பணிகளை செவ்வனே செய்திட வேண்டும். உணர்வுடன் வேலை செய்ய வேண்டும். ஏறி வந்த ஏணியை எட்டி உதைக்க கூடாது. கட்சிகாரர்கள் தான் மூலதனம், அவர்களை மதித்து நடக்க வேண்டும்.

அதனை உணர்ந்து பணியாற்ற வேண்டும். நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் சொந்த பகுதியில செல்வாக்காக இருக்க வேண்டும். வாக்கினை அதிகம் பெற உழைக்க வேண்டும்.

முதல்வர் கலந்துக் கொள்கின்ற கூட்டத்தில் கடலூர் தொகுதியிலிருந்து 21 ஆயிரம் நபர்கள் கலந்துக் கொள்ள வேண்டும்.

21ம் தேதியிலிருந்து வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தல் பணியினை துவக்க வேண்டும்.

கடலூரிலிருந்து நெய்வேலி வரை நமது மாவட்ட எல்லை வரை பெருந்திரளாக கலந்துக் கொண்டு முதல்வர் அவர்களுக்கு எழுச்சிமிகு வரவேற்பு அளிக்க இவ்வாறு பேசினார்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.

வருகின்ற 21.02.2025 வெள்ளிக்கிழமை, 22.02.2025 சனிக்கிழமை அன்று, கடலூர் மாவட்டத்திற்கு, கழக நிகழ்வுகள் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும், திராவிட மாடல் அரசினால் முடிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு திறப்பு விழா நிகழ்ச்சிகளில் பங்கேற்க வருகை தரும், முதல்வர் கழக தலைவர் தளபதி அவர்களுக்கு, கடலூர் சட்டமன்ற தொகுதி கழகத்தின் சார்பில், பிரம்மாண்ட வரவேற்பு அளிப்பது.

மார்ச் 1 தமிழக முதல்வர் கழக தலைவர் தளபதி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கடலூர் மாநகரம் மற்றும் கடலூர் தெற்கு வடக்கு ஒன்றியங்கள் சார்பில், கழக கொடி ஏற்றி, நலத்திட்ட உதவிகள் வழங்கியும், மருத்துவ முகாம்கள் நடத்தியும், மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கியும் சிறப்பாக கொண்டாடுவது என தீர்மானிக்கப்பட்டது.

மேலும் தமிழகத் துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தியும், மாணவர்களுக்கு சீருடைகள் வழங்குவது என தீர்மானிக்கப்பட்டது. கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இருமொழி கொள்கைக்கு எதிராக மும்மொழி திட்டத்தை திணிக்க முயற்சிக்கும், ஒன்றிய பாஜக பாசிச செயலுக்கு திராவிட போராளியான முதல்வர் தளபதி அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கல்விக்கு ஒன்றிய அரசு ஏகோபித்த எஜமானர்கள் அல்ல, திமிராக பேசினால் தமிழர்கள் குணத்தை டெல்லியில் பார்க்க நேரிடும்எனகுறிப்பிட்டுள்ளார்.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் எந்த பிரிவு மும்மொழி கொள்கையை கட்டாயமாக்குகிறது, என ஒன்றிய அமைச்சரால் கூற முடியுமா. கல்வி ஒத்திசைவு பட்டியலில் உள்ளது. இந்த நிலையில. மும்மொழி கல்வியை ஏற்கும் வரை தமிழ் நாட்டிற்கு நிதி கிடையாது என மிரட்டும் தடித்தனத்தை தமிழர்கள் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள் என எச்சரித்துள்ளார்.

இந்நிகழ்வில்; ஒன்றிய கழக செயலாளர்கள் தங்க. ஆனந்தன், பி.சுப்பிரமணியன், ஆர்.விஜயசுந்தரம், கே.ஆர்.தனஞ்செயன், மாநகர அவைத் தலைவர் பி.பழனிவேல், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வ.ஞானசேகரன், வே.விக்கிரமன், பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.பி.ஆர். பாலமுருகன், கணேசன்,கோதண்டபாணி,

பகுதி செயலாளர்கள் ஜி.பி.வெங்கடேஷ், எஸ். சலீம், எம்.இளையராஜா, மாநகர துணை செயலாளர்கள் பி.சுந்தரமூர்த்தி, , எல்சா, பொருளாளர் எம். இராஜேந்திரன்,

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜி.கார்த்திகேயன், துணை அமைப்பாளர்கள் மணிகண்டன், முத்துகுமார், மாநகர இளைஞரணி அமைப்பாளர் ஜெயமணி, துணை அமைப்பாளர்கள் உமாபதி,கோபி,ஜெயச்சந்திரன் குப்புராஜ், மாநகர மகளிர் அணி அமைப்பாளர் சுபஷினி, மாவட்ட வழக்கறிஞர் அணி அருள்ஜோதி, வழக்கறிஞர்கள் வனராசு, ராமன், அன்சாரி, மாவட்டத் தொண்டரணி அமைப்பாளர் ஆராமுது, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கே எஸ்.ஆர்.பாலாஜி, முன்னாள் தகவல் தொழுல் நுட்ப அணி வழக்கறிஞர் கே.எஸ்.ஆர்.கார்த்தி, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் தலைவர் ஓ. எல். பெரியசாமி, மாவட்ட சுற்றுச்சூழல் துணை அமைப்பாளர் க.கார்த்தி கேயன், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் குணசேகரன் உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள் மாநகர, ஒன்றிய, பகுதி ,வார்டு கழக நிர்வாகிகள் ,முன்னாள் உள்ளாட்சி பிரதி நிதிகள், கழக முன்னோடி கள், கழக தோழர்கள், பிரதிநிதிகள் ,கலந்து கொண்டனர்.

மாநகர துணை செயலாளர் அகஸ்டின் பிரபாகரன் நன்றியுரையாற்றினார்.

சென்னை கன்னிகாபுரம் அரசு ஆதிதிராவிடர் நலப்

பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கல்வியறிவு திட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி!

அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு – மா.மதிவேந்தன் பங்கேற்பு!

சென்னை, பிப். 19 -

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக நேற்று முன்தினம் (17.02.2025) சென்னை கன்னிகாபுரம் அரசு ஆதிதிராவிடர் நலப் பெண்கள் மேல் நிலைப் பள்ளியில் ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் எச்.டி.எப்.சி வங்கி இணைந்து நிதி கல்வியறிவு திட்ட விழிப் புணர்வு நிகழ்ச்சியினை இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி. கே. சேகர்பாபு, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் மருத்துவர். மா. மதிவேந்தன் மற்றும் மேயர் திருமதி ஆர். பிரியா ஆகியோர் தொடங்கி வைத்து சிறந்த ஆசிரியர் மற்றும் மாணவியர்களுக்கு நற்ச்சான்றிதழ் வழங்கி விழாவில் பேருரையாற்றினர்.

அமைச்சர்கள் பி.கே. சேகர்பாபு - மருத்துவர் மதிவேந்தன் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் தெரிவித்ததாவது, ஆதிதிராவிடர் நலத் துறை மற்றும் எச்.டி.எப்.சி வங்கி இணைந்து நிதி கல்வியறிவு திட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சியினைத் தொடங்கி வைப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம். இத்திட்டம் பெற்றோர்கள் மற்றும் மாணாக்கர்களுக்கு கல்வி மற்றும் அதிகாரம் அளிக்கும் வகையிலும், சமுக பொறுப்பு உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக இத் திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

சேமிப்புகள், முதலீடுகள் மற்றும் அரசாங்க நிதி உதவி திட்டங்கள் பற்றி தகவலறிந்துக் கொள்ளவும், குடும்பத்திற்குத் தேவையான நிதி அறிவையும் தெரிந்துக்கொள்ளும் வகையில் மாணாக்கர்களுக்கு அடிப்படை வங்கி கருத்துக்கள், சேமிப்பின் முக்கிய தத்துவம் மற்றும் நிதி ஒழுக்கம் பற்றிய எளிமையாக ஈர்க்கக் கூடிய வகையிலும், பெற்றோர்களுக்கு சேமிப்பு உத்திகள், முதலீட்டுக்கான வழிகள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவளிக்கக்கூடிய அரசாங்க நிதி உதவி திட்டங்களை தெரிந்துக்கொள்ளும் வண்ணம் எச்.டி.எப்.சி வங்கியின் வல்லுனர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்த உள்ளனர். நிதிக் கருத்துக்களை புரிந்துக் கொள்வதற்கும் அன்றாட வாழ்க்கையில் பயன்படுவதற்கு எளிமையாக அமையும் என அமைச்சர் பெருமக்கள் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில், வி.க சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் திருமதி க. லட்சுமி பிரியா, மற்றும் மாணவ, மாணவி யர்கள் கலந்து கொண்டனர்.



கடலூர் மேற்கு மாவட்டம் விருத்தாசலம் வடக்கு ஒன்றியம் ஒன்றிய துணை செயலாளர் தர்ம. மணிவேல் அவர்களின் தந்தை தர்மலிங்கம் அவர்கள் அண்மையில் மறைவெய்தினார் கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் அவரது இல்லத்திற்கு நேரில் சென்று அன்னாரது படத்திற்கு மலர்த்தூவி அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன் விருத்தாசலம் ஒன்றியக் கழக செயலாளர்கள் கனக. கோவிந்தசாமி தி.வேல்முருகன் நல்லூர் வடக்கு ஒன்றிய செயலாளர் பாவாடை கோவிந்தசாமி வழக்கறிஞர்கள் எம்.கே. அருள்குமார், கே. ரவிச்சந்திரன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் நெய்வேலி ராஜேஷ் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வசந்த் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.

திருப்பத்தூர் – கந்திலி உள்ளிட்ட இடங்களில் உள்ள

10 மேல் நிலைப் பள்ளி மாணவர்களுக்கு நல உதவிகள்!

சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி வழங்கினார்!

திருப்பத்தூர், பிப். 19 -

திருப்பத்தூர் சட்டமன்றதொகுதி சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி தொகுதி இளைஞர்கள், மாணவ, மாணவியர் நலனில் அக்கறை கொண்டு செயல்பட்டு வருகின்றார். தொகுதியில் படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறும் வகையில் வேலை வாய்ப்பிற்கான பயிற்சி வகுப்புகள் ஜவ்வாதுமலை புதூர்நாடு வனத்துறை மேல் நிலைப்பள்ளி, திருப்பத் தூர்நகரம் குட்வில் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றில் இரண்டு பயிற்சி மையங்களை தனது சொந்த செலவில், அனுபவம் வாய்ந்த பயிற்றுநர்களைக் கொண்டு நடத்திவருகின்றார். இதில் 300க்கும் மேற்பட்டோர் பயின்று வருகின்றார்.

அதனை தொடர்ந்து வருகின்ற மார்ச் மாதம் மேல்நிலை வகுப்பிற்கான பொதுத்தேர்வு நடக்க உள்ள நிலையில் திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மேல்நிலைப்பள்ளிகளுக்கும் சென்று 2500க்கும் மேற்பட்ட +2 மாணவ மாணவிகளை சந்தித்து மேல்நிலை வகுப்பிற்கு பிறகு என்ன படிக்கலாம். என்ற கையேடு, பேனா, பென்சில், ஸ்கேல், நோட்டுபுத்தகம் உள்ளிட்ட எழுதுபொருள் உபகரணங்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கி தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றிட வாழ்த்தினார்.

கந்திலி ஒன்றியத்தின் கசிநாயக்கன்பட்டி, குனிச்சி,பெரியகண்ணாலப்பட்டி, நத்தம், சுந்தரம் பள்ளி, திருப்பத்தூர் நகரத்திற்குட்பட்ட அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, மீனாட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மாதிரிப்பள்ளி, மேரிஇமாகுலேட் பெண்கள் மேல்நிலைப்பள்ளி,இராமகிருஷ்ணாமேல்நிலைப்பள்ளி ஆகியவற்றில் பயிலும் மாணவ மாணவிகளை சந்தித்து நல உதவிகள் வழங்கினார்.

அந்தந்த பள்ளி தலைமையாசிர்கள், தலைமையில் நடந்த இந்த நிகழ்ச்சிகளில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், கந்திலி ஒன்றியக் குழு தலைவர். திருமதி திருமுருகன், தலைமைசெயற்குழு உறுப்பினர்.கு.இராஜ மாணிக்கம், பொதுக்குழு உறுப்பினர்.சு.அரசு ஒன்றிய செயலாளர்கள். கே. ஏ.குணசேகரன், கே.முருகேசன்,கே.எஸ்.ஏ.மோகன்ராஜ், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர்.தசரதன், ஊராட்சி மன்ற தலைவர்கள். விஜயலட்சுமி கருணாநிதி, குமார், நடராஜ், நகர மன்ற உறுப்பினர்கள். கோபிநாத், ஜீவிதா பார்த்திபன் கலந்து கொண்டனர். சட்டமன்ற உறுப்பினருக்கு மாணவமாணவிகள் மானமார்ந்த நன்றியை தெரிவித்தனர்.

வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி பென்னாத்தூர் பேரூராட்சி கிராமத்தில் உள்ள அரசு பெண்கள், ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூ.4.30 கோடியில் பள்ளி கட்டிடத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார். அருகில் ஒன்றியச் செயலாளர் என்.கஜேந்திரன், பேரூராட்சி செயலாளர் பி.அருள்நாதன், பேரூராட்சி தலைவர் பவானி சசிகுமார், ஒன்றிய நிர்வாகிகள், பேரூராட்சி நிர்வாகிகள், பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.